தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (12.10.2024) சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள பகிர்ந்த பணியிடத்தில் (Coworking Space) நடைபெற்று வரும் உட்கட்டமைப்புப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டல குழுத்தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜ மகேஷ்குமார், பாலமுருகன், மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், மாநகராட்சி செயற்பொறியாளர் செந்தில்நாதன், சி.எம்.டி.ஏ செயற்பொறியாளர் ராஜன் பாபு, மாமன்ற உறுப்பினர்கள்நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.யோகபிரியா, திருமதி.அமுதா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளிதரன், கழக வழக்கறிஞர். சந்துரு ஆகியோர் உடனிருந்தனர்.

நேரில் வந்து பதிவு செய்ய முடியாது:

பக்தர்களின் பாதுகாப்பு கருதியே ஆன்லைன் முன்பதிவு அமல்!

கேரள அறநிலையத்துறை அமைச்சர் பேட்டி!

திருவனந்தபுரம், அக். 14 - பக்தர்களின் பாதுகாப்பைகருத்தில்கொண்டே கட்டுப்பாடு இறுக்கப்பட்டு உள்ளது. சபரிமலை ஐயப்பனை தரிசிக்க ஆன்லைன் முன்பதிவு கட்டாயம் என்பதை தளர்த்த முடியாது என்று கேரள அறநிலையத் துறை அமைச்சர் வி.என். வாசவன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பனை தரிசிக்க வெளிமாநிலங்களில் இருந்து மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் இருந்தும் கூட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். ஐயப்பனை தரிசிக்க ஒரு மண்டலகாலம் விரதம் அனுசரிக்க வேண்டும். காலில் செருப்பு அணியக் கூடாது. அகரீதியாகவும் பத்தியம் இருக்க வேண்டும்.

இப்போது பக்கதர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தேவசம் வாரியமும், கேரள அறநிலையத் துறையும் சில முடிவுகளை எடுத்துள்ளன.

கேரளாவின் சபரிமலை ஐயப்பன் கோயிலில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சென்று மக்கள் சாமிதரிசனம் செய்கின்றனர். தொடர்ந்து கூட்டம் அதிகரித்த வண்ணம் இருந்த நிலையில், உடனடி தரிசனம் ஆன்லைன் பதிவு என இருமுறைகளில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டு வந்தனர். இந்த இரு முறைகளையும் பயன்படுத்தப்பட்ட நிலையில், மண்டல மற்றும் மகரவிளக்கு சீசனின்போது 15 மணி நேரம் வரைதரிசனத்துக்காக பக்தர்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இந்த ஆண்டு மண்டல பூஜை நேரத்தில் ஐயப்பனை தரிசனம் செய்ய முடியாமல் வீடு திரும்பினர். சமூக வலைத்தளங்களில் தேவசம் வாரிய நிர்வாகத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. தொடர்ந்து கூட்டநெரிசல் தொடர்பாக திருவிதாங்கூர் தேவசம் வாரிய தலைவ சாந்த் தலைமையில் உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நேரடி முன்பதிவு காரணமாக நாள்தோறும் 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் குவிந்ததாகக் கூறி உடனடி தரிசன முறையை ரத்து செய்ய முடிவெடுக்கப்பட்டது. இனிசீசன்காலங்களில் ஆன் லைன் முன்பதிவு அடிப்ப டையில் ஒரு நாளைக்கு 80 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் எனவும் இதனால் நிலக்கல், பம்பை உள்ளிட்ட 10 இடங்களில் செயல்பட்டு வந்த உடனடி முன்பதிவு கவுன்டர்கள்மூடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மண்டல மகர விளக்கு பூஜைகளை முன்னிட்டு 3 மாதங்களுக்கு முன்னதாகவே ஆன்லைன் முன்பதிவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து கூட்டம் முடிந்ததும் தேவஸ்தான தலைவர் பிரசாந்த் அறிக்கையை வெளியிட்டார். அதில் இனி வரும் காலங்களில் பக்தர்கள் ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர் எனவும் உடனடி தரிசன முன்பதிவு முறை ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பம்பை முதல் சன்னிதானம் வரைரோப்கார் அமைப்பது குறித்து ஆய்வு பணிகள் தொடங்கப்பட்டு உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விரிவான அறிக்கை, வரும் 23ம் தேதி உயர்நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும் எனவும் நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் ரோப் கார் பணிகள் தொடங்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அப்பம், அரவணைக்குத் தேவையான பொருட்களை கொண்டு செல்லவும், அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் சேவைக்கும் ரோப் கார் பயன்படுத்தப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் பதிவில்லாமல் சபரிமலைக்கு நேரடியாக வந்து முன்பதிவு செய்ய பக்தர்கள் எக்காரணம் கொண்டு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தேவசம் வாரியமும், அறநிலையத்துறையும் திட்டவட்டமாக அறிவித்துள்ளதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. நேரடியாக வரும் பக்தர்களையும் ஐயப்பனை தரிசிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்க முடியாது என்று தேவசம் வாரியம் அறிவித்துவிட்டது.

இந்நிலையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த கேரள அறநிலையத்துறை அமைச்சர் வி.என்.வாசவன், "பக்தர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படக்கூடாது. கூட்ட நெரிசலில் சிக்கி திணறக்கூடாது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் அரசு திடமாக உள்ளது.

எனவே பக்தர்கள் அனைவரும் அரசின் முடிவுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கறேன். ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்வதன் வாயிலாக நேர விரயத்தையும் குறைக்க முடியும். இது பக்தர்களுக்கு உகந்ததாக இருக்கும். எனவே இந்த புதியவிதிமுறையை அரசு தளர்த்தாது" என்று கூறினார்.

தொடர் ரயில் விபத்து:

ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை!

ராகுல்காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, அக்.14 - ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், நாடு முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் 200 பெரும் ரயில் விபத்துகள் நிகழ்ந்துள்ளதும், இதில் 351 பேர் உயிரிழந்ததும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் அம்பலமாகியுள்ளது.

சமூக ஆர்வலர் விவேக் பாண்டே தகவல் அறியும் சட்டம் மூலம் எழுப்பிய கேள்விக்கு, ரயில்வே துறை அளித்துள்ள பதிலில், நாடு முழுவதும் கடந்த 2019-20 முதல் 2023-24 வரையிலான கடந்த 5 ஆண்டுகளில், 200 பெரும் ரயில் விபத்துகள் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்துகளில் 351 பேர் உயிரிழந்தனர். 970 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் அதிகபட்சமாக தென்கிழக்கு ரயில்வே மண்டலத்தில் ஏற்பட்ட 10 பெரும் விபத்துகளில் 297 பேர் உயிரிழந்தனர். 637 பேர் காயடைந்துள்ளனர். ரயில்வே துறையின் 17 மண்டலங்களில் இருந்து அளிக்கப்பட்டுள்ள பதில் மூலம் இது தெரியவந்துள்ளது.

ராகுல் காந்தி பேட்டி!

தொடர் ரயில் விபத்துகளில் உயிரிழப்புகள் பல

ஏற்பட்டபோதும், ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மைசூருதர் பங்கா ரயில் விபத்து, பயணிகள் ரயில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலுடன் மோதிய பாலசோர் விபத்தை நினைவு படுத்துவதாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார். தொடர் ரயில் விபத்து களில் பல உயிர்கள் பலியாகியிருந்தாலும் ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை என்றும், இதற்கான பொறுப்பு உயர்மட்டத்தில் இருந்து தொடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். ஒன்றிய அரசு விழித்து க் கொள்வதற்கு முன் இன்னும் எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட வேண்டும் என்றும் ராகுல் காந்தி கேள்வி எழுப்பி உள்ளார்.

அயலக தி.மு.க. குவைத் சார்பில் முரசொலி செல்வம் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டை பஷீர் தலைமையில் நடந்த இரங்கல் கூட்டத்தில். ஆலஞ்சியார், பத்தமடை க.சிந்தாபக்கீர், தளபதி பேரவையின் செல்வம்'. விசிகவின் அழகர்சாமி, மகிழன் செல்லதுரை, மக்கள் சேவை மையம் அலிபாய் உதவும் கரங்கள் மஜீது, வாழ்வுரிமைக்கட்சி தமிழன் சாகுல், அம்மையப்பன், செல்வம்,கலகலப்பு சரவணன், ஜியாவுதீன் மற்றும் பலர் முரசொலி செல்வம் அவர்களை நினைவு கூர்ந்தனர். இக்கூடடத்தில் காட்டூர் ஆறுமுகம், சையத் முஸ்தபா, அறிவுமணி, பாஞ்சி பீர், காட்டுபாவா, முனசந்தை சிக்கந்தர். கறம்பங்குடிஜாபர் சாதிக், கொளத்தூர்கனேஷ், கொடவாசல் சதாம்உசேன், தச்சன்குறிச்சிஜான்பாஷா, மஜகவினர் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்பை சேர்ந்த தோழர்கள் கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

கோயம்பேடு அங்காடி வளாகத்தில் ரூ.17.40 கோடியில் சீரமைக்கப்படும்

மழைநீர் வடிகால் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெறுகிறது!

ஆய்வுக்குப் பின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக்.14 - முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (12.10.2024) சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 'A' சாலையின் நுழைவு வாயில் எண்.14 அருகில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.86 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்க ப்பட்டு வரும் மருத்துவ சேவை மையத்தினையும் (Mini Clinic) மற்றும் ரூ.17.40 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படவுள்ள மழைநீர் வடிகால் பணிகளையும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள பகிர்ந்த பணியிடத்தில் (Coworking Space) நடைபெற்று வரும் பணிகளையும், பெரியார் நகர் மற்றும் ஜவகர் நகர் நூலகத்தில் சி.எம்.டி.ஏ. சார்பில் பகிர்ந்த பணியிடம் (Coworking Space) அமைப்பதற்கான முன்னேற்பாடுப் பணிகள் குறித்தும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் பெருமழை வெள்ளத்தின் போது ஏற்படுகின்ற தண்ணீர் தேக்கத்திற்கு நிரந்தரத் தீர்வாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி முதல் கட்டமாக ரூபாய் 17.40 கோடி செலவில் மழைநீர் கால்வாய் அமைப்பதற்குண்டான ஒப்பந்தங்கள் நிறைவுற்று பருவமழையை பொறுத்து அந்த பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளது. அதேபோல் ஏற்கனவே இருக்கின்ற புதிதாக கட்டப்பட இருக்கின்ற கால்வாய்களை தவிர்த்து ஒரு 850 மீட்டர் அளவிற்கு கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி துவங்குகிறபோது கட்டப்பட்ட அந்தக் கால்வாயை மறு சீரமைக்க வேண்டும் என்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கின்றார். அந்த பணிகளும் ஏற்றுக் கொள்ளப்படும். தற்பொழுது சென்னை மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெறுவதால் இந்தப் பகுதியில் பெய்கின்ற அவ்வப்போது மழை தண்ணீர் தேவை என்ற நிலை இருக்கின்றது.

சென்னை மெட்ரோ ரெயில் பணி முழுவதுமாக நிறைவுறுவதற்கும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கட்டப்பட இருக்கின்ற 770 மீட்டர் அளவுக்குண்டான கால்வாய் பணிகளும் இந்தப் பருவ மழைக்குப் பிறகு தான் அவை முழுமையாக கட்டுமான பணி நிறைவு பெறுகின்ற சூழ்நிலை இருப்பதால் அந்த இடத்தில் இந்த மழைக்கு தேங்குகின்ற தண்ணீரை வெளியேற்றுவதற்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 60 ஹெச்.பி. அளவிற்கு புதிதாக மோட்டார்கள் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளை உடனடியாக அந்தப் பகுதியில் நிறுவுவதற்கு இன்றைக்கு எங்களுடைய துறையின் உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, இந்த கோயம்பேடு மார்க்கெட் பகுதியை கண்காணித்து வருகின்ற திருமதி.இந்துமதி, மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதி களும் ஒருங்கிணைந்து இன்றைக்கு ஆய்வினை மேற்கொண்டுள்ளோம்.

கால்வாய் கசடுகள் உடேன அகற்றப்படும்!

இந்த கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் தேங்குகின்ற இந்த நீரானது வெளியேற்றப்படுகின்ற பகுதிகளையும் அந்த கால்வாய்களையும் சுத்தப்படுத்துகின்ற பணிகளை மேற்கொள்வதற்காக அந்த இடங்களையும் ஆய்வு செய்து இருக்கின்றோம். போர்க்கால அடிப்படையில் அந்த பணிகள் அனைத்தும் இன்றைக்கு தொடங்க இருக்கின்றது. அந்தக் கால்வாய் பகுதியில் இருக்கின்ற கசடுகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இந்த மழை தொடரும் என்று ஆரஞ்சு அலட் தந்திருக்கின்ற அந்த தேதிகளான 14, 15, 16 போன்ற தேதிகளுக்கு கூடுதலாக உடல் உழைப்பு பணியாளர்களை நியமித்து அந்த கால்வாய்கள் துரிதப்படுத்தி தூர்வார்கின்ற பணியை மேற்கொள்வதற்கும் துறை சார்பில் உத்தரவிடப்பட்டு இருக்கின்றது.

ஆகவே இந்த பெருமழை சமாளிப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் மூன்று முறை கலந்தாய்வு கூட்டங்களை நடத்திருக்கின்றார். அந்த வகையில் போர்க்கால அடிப்படையில் பெருமழை வெள்ளம் ஏற்பட்டால் சமாளிப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் துரிதப்படுத்து கின்ற ஒரு நிகழ்வாக தான் இன்றைய ஆய்வு அமைந்திருக்கின்றது.

பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை!

கேள்வி: பெருவெள்ளம் காலங்களில் கோயம்பேடு மார்க்கெட் சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற மார்க்கெட் பகுதிக்கு உள்ள காய்கறிகள் அழுகும் நிலைமை அந்;த பகுதியை எவ்வாறு சுத்தம் செய்யப்படும் அதுக்குண்டான நடவடிக்கைகள் என்ன?

பதில்: இந்த ஆய்வு தொடங்குவதற்கு முன்பு கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் புதிதாக ரூபாய் 86 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு வரும் மருத்துவமனை இன்று காலை ஆய்வு செய்தோம். அப்பொழுது நடந்த சிறிய கலந்தாலோசனையில் இந்த கழிவுகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு இந்த பருவ மழை காலங்களில் கூடுதலாக 20 பணியாளர்களை நியமிக்க நமது உறுப்பினர் செயலாளர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார். கோயம்பேடு மார்க்கெட் பகுதியை கண்காணித்து வருகின்ற திருமதி.இந்துமதி அவர்களிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளைக்கே அந்த பணியாளர்களை சுழற்சி முறையில் அங்கு சேர்கின்ற குப்பைகளை கழிவுகளை அகற்றுவதற்குண்டான பணிகளும் துரிதப்படுத்த இருக்கின்றன.

துக்கத்தில் இருந்தாலும் களத்தில் துணை முதல்வர்!

கேள்வி : ரயில் விபத்தில் துணை முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்துள்ளார் அதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள்?

பதில்: இந்த ஆட்சி சிறப்பாக செயல்படுகின்ற ஆட்சி என்பதற்கு காரணம் விபத்து நடந்த உடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களை முடுக்கிவிட்டு விபத்து நடந்த பகுதிகளுக்கு மாவட்டத்தினுடைய சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் நாசர், அந்த மாவட்டத்தினுடைய ஆட்சியாளர், காவல்துறை போன்ற அனைவரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியை துரிதமாக இருக்கின்றனர்.

நம்முடைய துணை முதலமைச்சர் நேற்றைக்கு முன்தினம் இருந்து தொடர்ந்து திராவிட கழகத்தினுடைய ஒரு வேராக, 'பில்லர்' ஆக கருதப்பட்ட அருமை அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் துக்கத்தில் தொடர்ந்து இரண்டு நாட்கள் அங்கே நின்றபடி இருந்தாலும், மக்களுக்கு பாதிப்பு என்றவுடன் உடனடியாக களத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயர் சிகிச்சை அளிப்பதற்கும், பாதிக்கப்பட்ட மக்களை பார்த்து ஆறுதல் சொல்வதற்கும், களத்திற்கு சென்று பொதுமக்களிடையே, எங்களைப் போன்று களத்திலே நிற்பவர்களுக்கு ஒரு உற்சாகத்தையும் மோட்டிவேஷனையும் உருவாக்குகின்றது. அந்த மாவட்டத்தினுடைய பொறுப்பாளராக இருக்கக் கூடிய எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா நேற்று இரவு இரண்டரை மணி வரையிலும் ஸ்டான்லி மருத்துவமனையில் தான் இருந்திருக்கின்றார். இப்படி அதிகாரிகளும் அரசியல் கட்சியும் பொறுப்பில் இருப்பவர்களும் ஒருசேர மக்களுக்கு துன்பம், துயரம் எழும்பொழுது பாடுபடுகின்ற திராவிட மாடலா ஆட்சியாக நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சியை செலுத்துவதில் பெருத்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரி zவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி தலைமை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி, சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன பொது மேலாளர் கே.ரவி, மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், சி.எம்.டி.ஏ. செயற்பொறியாளர்கள் ராஜன் பாபு, திருமதி.விஜயகுமாரி, மாநகராட்சி செயற்பொறியா ளர்கள் பெரியசாமி, செந்தில்நாதன், L&T நிறுவன திட்ட மேலாளர் குருசாமி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் வி.லோகு, நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி. யோகபிரியா, திருமதி. அமுதா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளி, வழக்கறிஞர் சந்துரு ஆகியோர் உடனிருந்தனர்.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு

திருப்பத்தூரில் வடமாடு மஞ்சுவிரட்டு!

அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. அக்.14 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் ஒன்றிய, பேரூர் கழகம் மற்றும் அனைத்து அணிகளின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வடமாடு மஞ்சுவிரட்டு; நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையேற்று வடமாடு மஞ்சுவிரட்டினை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்த வடமாடு மஞ்சுவிரட்டில் சிவகங்கை, புதுக்கோட்டை, மதுரை, மேலூர் மற்றும் பல்வேறு ஊர்களிலிருந்து மாடுபிடி வீரர்கள் பங்கேற்றார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், பொதுக்குழு உறுப்பினர் பி.ஆர் .பெருமாள் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

வடமாடு மஞ்சுவிரட்டு விழா ஏற்பாடுகளை செ . தமிழ் நம்பி, ஜான் கென்னடி, முத்துக்குமார் ,கா. சோமு, தனபால், தங்கவேல், ஜக்காரியா, சிவா, ராஜேஷ், கார்த்திக், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் முகமது கனி, ஆகியோர் செய்து இருந்தார்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குத் தோள் கொடுத்து நின்றவர்:

முரசொலி செல்வம் மறைவு பெரும் துயரம்!

அரசு ஊழியர் - ஆசிரியர் நல கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் சா.அருணன் இரங்கல்!

சென்னை, அக்.14 - முத்தமிழ் கலைஞர் அவரின் மனசாட்சியாக எப்படி முரசொலி மாறன் அவர்கள் திகைந்தாரோ அதே நிலையில், முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களின் ஏற்றத் தாழ்வில் தோள் கொடுத்து நின்றவர் முரசொலி செல்வம் அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப் பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:-

முரசொலியின் முன்னாள் ஆசிரியரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சகோதரியாரின் இளைய மகனும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மன சாட்சி முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சகோதரியார் திருமதி செல்வி அவர்களின் கணவருமான முரசொலி செல்வம் அவர்கள் அக்டோபர் 10ம் தேதி மதியம் உடல்நல குறைவால் பெங்களூரில் இயற்கை எய்தினார் என்ற செய்திக்கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் எப்படி மனசாட்சியாக விளங்கினாரோ அதேநிலையில் தான் தமிழ்நட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்களுக்கு அண்ணனாக இருந்து அனைத்து ஏற்றத் தாழ்விலும் தோள் கொடுத்து நின்றவர் முரசொலி செல்வம் அவர்கள், முரசொலி ஆசிரியராக இருந்து தன் எழுத்துக்களால் திராவிட முன்னேற்ற கழகத்தை வளர்க்க பெரிதும் உழைத்மவர் மேலும் அவர்களின் எழுத்து பகுத்தறிவு சிந்தனைகளையும் திராவிட சித்தாந்தத்தை பறைச்சாற்றுவதாக இருந்தது.

அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களை தன் எழுத்துக்களால் வெளியிட்டு ஆட்சிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார் இதனால் ஆத்திரம் அடைந்து 2001 ம் ஆட்சிக்கு வந்த அதிமுக அரசு சட்டப்பேரவையில் கூண்டியேற்றி வஞ்சித்தது துளியும் அஞ்சாமல் தனது புரட்சி பணிகளை தொடர்ந்து ஆற்றிவர் தான் முரசொலி செல்வம் அவர்கள், அவரின் புகழ் தமிழ் இருக்கும் வரை நிலைத்திருக்கும். அமைதி பண்பு பாசம் பரிவு பகுத்தறிவு, திராவிடம் இந்த அத்தனைக்கும் ஒரே பெயர் முரசொலி செல்வம் என்றால் அது மிகை ஆகாது அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அவரது மனைவி அம்மையார் திருமதி செல்வி அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் திராவிட முன்னேற்ற கழகத் தொழர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்ட மைப்பு சார்பில் ஆழ்ந்த வருத் தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.